உ

சிவமயம்.

துடி- நூல்.

இவை

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்.

பார்வையிடப்பட்டு,

இஃது,

திருவொற்றியூர்

பரசுராம முதலியார்

குமாரர்

தி-கன்னியப்பமுதலியார்.

அண்டுபிரதர் அவர்களது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௯௯ ௵.

உ

சிவமயம்.

துடி நூல்.

—(0)—

காப்பு-வெண்பா.

ஆராயுஞ்செந்தமிழா லாயபயனெடுத்துச்
சீரார் துடி நூலைச் செப்பவே—காரார்
களத்துவிநாயகன் காத்தருளும்பூத
களத்துவிநாயகன் காப்பு.

விருத்தம்.

சிருடனேதுடிக்கிலுச்சி யிடரோநீங்கும்
சிறந்தவுச்சிவலந்துடிக்கி லிச்சஞ்சொல்லும்
பெருடனேவுச்சியிடம் பெருமையாகும்
பின்றலையேதுடிக்கிற் சத்துருக்களுண்டாம்
சார்புடனேதலையடங்கற் றுடிக்குமாகின்
றலைவனாற்பெருமை சம்பத்துமுண்டாம்
நேருடனேநெற்றியிடந்துடிக்குமாகின்
நோவார்த்தைசப்பத்துநிறையவாமே. (௧)
நிறையநெற்றிவலந்துடிக்கிற் பிணியேநீங்கும்
நீண்டவலப்புருவமிகப் பெருமையாகும்

பிறையனையபுருவமிடந் துடிக்குமாகின்
　　பெரியதொருபொல்லாங்கு பேச்சுமுண்டாம்
குறையறவேயிருபுருவந் துடிக்குமாகின்
　　கோதின்மிகுபெருமை தானெய்துமென்பார்
மறைவறுசீர்வலதுநிமை மேலேயாகின்
　　வழக்குண்டாய்த்தீருமிது வாய்மைதானே. (௨)

வாய்மைவலக்கண்ணினிமை மேலேயாகின்
　　வல்விசனத்தாலழுகைவந்துமாறும்
தூய்மைபெறுமுற்குவளை துடிக்குமாகின்
　　றொடர்ந்தவழக்கதனை தனக்காகவெல்லும்
தீமையறப்பிற்குவளை துடிக்குமாகின்
　　சிறந்தபெருப்புகழுடனே செல்வமுண்டாம்
தூய்மைவலக்கண்ணினிமை கீழதாகின்
　　துணைவனுக்கேயிடறுவருஞ் சொல்லுங்காலே ()

சொல்லிடக்கண்ணினிமை மேலதாகின்
　　சுகமிகுத்தசம்பததாந் தொலைவிலாத
வல்லவலக்கண்ணடையத் துடிக்குமாகின்
　　வருத்தமுறும் பிணிசிறிதுவந்துமாறும்
எல்லையில்லாவிடக்கணெங்குந் துடிக்குமாகின்
　　இருநிதியமிகப்பெருகு மியம்புங்காலே
அல்லலுடனகழுத்தளவுந் துடிக்குமாகின்
　　அவன்சிரமக்கற்றுவிழு மறுதிதானே. (௪)

தானேவன்பிடரின் வலந்துடிக்கினன்மை
சார்ந்தவிடப்புறமாகிற் றசமையுண்டாம்
கானகமாமுதுகுபிடராக்கமாகும்
கனவலதுபுயப்புறமே வழக்குநன்மை
ஈனமிலாதிடதுபுயப் புறமேயாகின்
ஏந்திழையுண்டிணியவலப் புயமேமுற்றும்
ஊனமுடனொருசெய்தி தூரத்தெய்தும்
உரமிடப்புறஞ்சாவென் றுரைப்பதமாமே. (௫)

உரைக்கில்வலக்கண்டக்கை யடைபேறாகும்
உரவிடக்கண்டக்கையுறு தோஷந்தீரும்
தரைக்குண்மிகுதலைப்பயனும் வலமுழங்கை
தாவிலிடமுழங்கைதனஞ் சாருநன்மை
பெருக்கமுறும்பேறாகும் வலமுழங்கை
பிறர்க்கேடாமிடது முன்கைப்பேசுங்காலே
விரிக்குமசங்கைவலத்தே துடிக்கிலீனம்
மேவுமெனப்புலமையினோ ரியம்பினரே. (௬)

இயம்புஞ்சங்கையிடத்தே லாபமாகும்
இயல்புடனேவலப்புறங்கை வழக்கதாகும்
பயமுறவேயிடப்புறங்கைத் துன்பமேவும்
பருத்தவலப்பெருவிரலி லாபமாகும்
நயப்பெறமேசுட்டுவிர லிலாபமாகும்
நடுவிரலில்நற்கருமமெய்துமிக்க

வயப்படைத்தவணிவிரலிற் பெருமையாகும்
மறுவில்சிறுவிரலுமற்றோர் சேர்ந்தசமே. (எ)

சேர்ந்தவலக்கையடியே துடிக்குமாகின்
சிறந்ததொருகருமமுற்றுஞ்செல்வமுண்டாம்
நேர்ந்தவிடக்கைப்பெரிய விரலதாகின்
நிறைபெருமேசுட்டுவிர லிலாசநோக்காம்
சார்ந்தநடுவிரலின்மிகப் பெருமையுண்டாம்
சவியிலகுமணிவிரலே சாருநன்மை
வார்த்தசிறுவிரலாயின் மரணமில்லை
வஞ்சநமனேடுமவன் வலிமைகேட்டே. (அ)

கேட்டவன்றனிடக்கையினிற் றுடிக்குமாகின்
கிலேசமுடனவனிருந்த பதியிழக்கும்
நாட்டமுறுநெஞ்சுதனிற் றுடிக்குமாகின்
நலமிலாநோக்காடு சாவுமெய்தும்
ஈட்டமுடன்வலமுலையிற் றுடிக்கிற்சாவாம்
இடமுலையிற்பிரியமனை யணையதொப்புள்
நீட்டநிறைவிசனமாம் வயிறேயாகின்
நிதமுமொருநோய்வந்து நீங்குங்காணே. (கூ)

காணவலப்புறமுதுகு துடிக்குமாகின்
கரியவிடநோய்க்காட்டிக் கடிதிற்றீரும்
கோணலிலாவிடதுபுற முதுகேயாகின்
குடியிருந்தமனையகலவேறூரத்தேகும்

தானையமுதுகடையத் துடிக்குமாகின்
தாபமுதலாகியநோய் தணியாவென்ப
தோளைவலச்செட்டையினிற் றுடிக்குமாகின்
துணிகிடைக்கும்புதிதாகத் தோன்றிப்பாரே. (௰)

பார்த்தவிடக்கைச்செட்டைப்பிரியஞ்சொல்லும்
பரிந்திரண்டுகைச்செட்டைப் பழுதென்றோதும்
சேர்ந்தவலமூக்கடையத் துடிக்குமாகின்
செல்வமுறும்லாபம் பலசம்பத்துண்டாம்
ஏர்த்தவிடமூக்கடையத் துடிக்கிற்செல்வம்
எய்துமிதழ்மேற்றுடிக்கி லினியவார்த்தை
போர்த்தகீழுதடுதனிற் றுடிக்குமாகின்
புதியதின்பண்டங்கள் பொருந்துமெல்ல. (௰௧)

மெல்லவலவிலாத்துடிக்கில் விசனமாகும்
மிகுந்திடவேவிலாத்துடிக்கில் வீடிழக்கும்
வல்லவலத்திசையாகிற் பொருளேசேரும்
வருபயணப்போதலுறுந் தயவுநன்மை
மல்லுறுந்திசையிரண்டுந் துடிக்குமாகின்
வருந்தியநோய்தீருமலர் வின்பமாகும்
அல்லலும்போமதிபார வினையுந்தீரும்
அறிந்தவாற்கைப்பொருளும்விழுமாமே. (௰௨)

விரைவாகவிடைதுடிக்கில் வேள்விசெய்யும்
மிகப்பேறுண்டாகு மேவுங்காலே

அரையிலேசோசமது துடிக்குமாகின்
அருளிசனந்தூரத்தாராலேயாகும்
வரையிற்கீழ்க்கோசமது துடிக்கினன்மை
வல்வினைதயேகரிகுதிரை யேறுமென்னும்
நினைவிடவிதைதுடிக்கி னோயேதீரும்
நேரிரண்டுந்துடிக்கில்வழக் கெய்துந்தானே (௰௩)

எய்திடுமோர்வலத்தொடையிற் றுடிக்குமாகின்
இயல்பலாதொருவழக்குண்டாகவெல்லும்
செய்திடத்தொடையினிய வார்த்தையாகும்
சிறந்ததொடையிரண்டினுஞ்செம்பொன்சேருண்
டாய்—நோய்துவளமுழந்தாளிற்கோபமுண்டாம்
நோக்கிடமுழந் தாளிற்பந்துசேரும்
தூயமொழிமைந்தர்முழந் தாளிரண்டிற்
செகமாளுமென்பரிசைப் புலவர்தானே. (௰௪)

புலவரிசைப்பார்வலக்கால் கண்டையாகின்
பொருந்துநல்லடிமை தான்பொருவிலாத
வலதுகணைக்கால்துடிக்கிற் சம்பத்துண்டாம்
வளரிடதுகணைக்காலிற் சாவின்வார்த்தை
கிலமிசைவிடக்காலின் கண்டையாகின்
கிலேசமுறும்பெறுநோயுங் கிளருமென்ப
நலமுடனேயிரண்டுகணைக்கால்துடிக்கின்
நிக்கமுடனோட்டந்தா னயக்கூறே. (௰௫)

கூறுவலப்புறவடியிற் றுடிக்குநோயாம்
கோதிலிடப்பிறவடியே வழக்காய்வெல்லும்
ஊறும்வலதுள்ளங்கால்பொருள்கைகூடும்
ஊன்றுமிடதுள்ளங்கால் பிணியாய்மீளும்
காறுமணிகழற்கணைக்கால் சிவிகையேறும்
கால்விரலிலங்கதனிற் றுடிக்குமாகின்
நாறுமலர்த்திருமகளுஞ் சேரும்வேணா
நன்மையுமுண்டாம்வாழ்வு நறசிராமே. (௰௬)

முற்றிற்று.

——(0)——

இந்நூலாசிரியர்.

மன்னன்விக்கிரமாதித்தன் சொல்வழிப்
பன்னிரண்டொருநால்விருத்தப்பாவில்
துன்னுசீர்த்துடிநூலைத் தொகுத்தனன்
றன்னிலம்புகழிராமனுதன்றனே.